# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 01.02. 2021 | 1) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “சீர்மிகு நகரம்” (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட “சீர்மிகு நகரம்” (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MALL) எண் 112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br>அதன்பேரில் தலைவர் தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 11, 02, 05, 06, 07, 08 நாள் 20.01.2021இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | 6) அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது<br>அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது. |
| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. கோடி) |
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாளையங்கோட்டை ரோடு பகுதியில் உள்ள அறிவியல் பூங்காவில் (வ.உ.சி. கல்லூரி அருகில் Planetarium அமைக்கும் பணி | 1.67 |
| 2 | மாநகராட்சிக்குட்பட்ட சிதம்பர நகர் பகுதியில் Study Centre அமைக்கும் பணி | 1.35 |
| 3 | தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாளையங்கோட்டை ரோடு (எம்.ஜி.ஆர். பூங்கா எதிர்புறம்) பகுதியில் Food Street அமைக்கும் பணி | 2.80 |
| 4 | Construction of Smart Depot in New Bus stand | 9.00 |
| 5 | Renovation of Heritage Building in five Locations (Heritage buildings of Middle School in south new street, Old Municipal Corporation Building, Ashe’s Memorial park and Renovation with painting in front elevation of existing Heritage residential buildings in TR Street South Raja street ) | 4.582 |
| | மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள பணிகளினை ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு மேலாண்மை இயக்குநர் தூத்துக்குடி ஸ்மார்ட்சிட்டி லிமிடெட் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி செயல்முறை ஆணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணிகளுக்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி | |

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் பதிவு செய்யலாம்<br>2) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/3209/2015 (W) | |
| | 2)தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் கால்நடைகளால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதாக வந்த புகார் மனுவின் பேரில் ஆணையர் அவர்களின் உத்தரவின் படி மாடு பிடிக்கும் பணியாளர்களைக் கொண்டு மாநகராட்சி பகுதிகளில் மாடுகள் பிடிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி எல்லைக்குள் சுற்றித்திரிந்த மாடுகளை பிடிக்க தலா ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு கூலியாக ரூ.600/– வீதம் 10 நபர்களைக் கொண்டு பிடிக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனமான ராஜேஸ்வரி கோசலா டிரஸ்ட் வடக்கு காவலர் குறிச்சியில் ஒப்படைக்கப்பட்டது. மொத்த செலவினம் கீழ்க்கண்டவாறு. | 7) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| மாடுபிடிக்கும் பணி நடைபெற்ற தேதி | மாடு பிடித்த பணி விபரம் | கணக்கீடு ரூ. |
| 19.12.2020 (ம) 20.12.2020 | 10 நபர்கள் கூலி | 12000 (10 X 600) |
| | வாகனம் | 17000 |
| | உணவு செலவு | 2000 |
| | மாடு பிடிக்க கயிறு | 2000 |
| | **மொத்தம்** | ரூ. 33000 |
| | மேற்படி மாடு பிடிக்கும் பணியாளர்களுக்கு கூலி, உணவுச் செலவு மாடு பிடிக்க கயிறு செலவு மற்றும் மாடுகளை கொண்டு செல்ல வாகனச் செலவு தொகை மொத்தம் ரூ 33,000/–னை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/15232/2012 | |
| | 3)இம்மாநகராட்சியில் நடைபெற்று வரும் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் மீதமுள்ள பணிகளுக்கும் திட்ட மேலாண்மை கலந்தாலோசக நிறுவனமாக M/S.WAPCOS Limited Chennai ஒப்பந்தப்புள்ளியின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் மீதமுள்ள பணிகளுக்கும் திட்ட மேலாண்மை கலந்தாலோசக நிறுவனமாக M/S.WAPCOS Limited Chennai ஐ நியமிக்க ஆணையர் அவர்கள் 30.12.2020 அன்று ஒப்புதல் அளித்ததின் பேரில் மீதமுள்ள பணிகளை பார்வையிடுவதற்கு M/S.WAPCOS Limited Chennai அவர்களையே நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டு M/S.WAPCOS Limited Chennai நிறுவனத்திடம் 07.01.2021 | 8)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அன்று ஒத்திசைவு கடிதம் கேட்கப்பட்டதற்கு இணங்க மேற்கண்ட நிறுவனம் விலைப்புள்ளி தொகை ரூ 3,93,20,000/– GST நீங்கலாக அளித்துள்ளனர். மற்றும் அதன் தொடர்ச்சியாக 13.01.2021 அன்று நடைபெற்ற விலைகுறைப்பு கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் அவர்கள் மேற்கண்ட M/S.WAPCOS நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்து தர கேட்டுக்கொண்டதன் பேரில் நிறுவனம் விலைக்குறைப்பு கடிதத்தினை 13.01.2021 அன்று சமர்ப்பித்துள்ளனர். விலைக்குறைப்பின்படி மேற்கண்ட நிறுவனமானது ரூ. 3,60,41,500/– GST நீங்கலாக திட்ட மேலாண்மை கலந்தாலோசக தொகையாக அளித்துள்ளனர். அந்த தொகையானது பட்டியலிடப்பட்ட பணிகளின் மொத்த தொகையில் (32765 கோடி) 1.10 சதவிகிதம் ஆகும். மேலும் திட்ட மேலாண்மை ஆலோசனை குழுவினை புதிய ஒப்பந்தம் மூலம் நியமிக்க குறைந்தபட்சம் 2 மாத காலம் ஆகும். மற்றும் சீர்மிகு திட்டப்பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி M/S.WAPCOS நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மேலாண்மை இயக்குநர் ஸ்மார் சிட்டி லிமிடெட் வேலை உத்தரவு வழங்க Minutes of Meeting ல் தெரிவிக்கப்பட்டு 18.01.2021 அன்று வேலை ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) M/S.WAPCOS Limited Chennai நிறுவனத்தினை மீதமுள்ள பணிகளுக்கும் திட்ட மேலாண்மை கலந்தாலோகராக நியமனம் (PMC) செய்ததை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 (PMC) | |
| | 4)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட திரவிய ரத்தின நகர் கிழக்கு குறுக்கு தெருவில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணிக்காக ரூ. 23,20,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 14.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 15.10.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1) திரு. பி. ஜோதிமணி<br>மதிப்பீட்டை விட 6.73 சதவிகிதம் குறைவு (ரூ. 18,90,800.00)<br>2)திரு.பி. ஜெபர்சன் சாமுவேல்ராஜ்<br>மதிப்பீட்டை விட 0.10 சதவிகிதம் குறைவு (ரூ. 20,25,032.75)<br>3)த்ரு. கே. பாலகிருஷ்ணன்<br>மதிப்பீட்டை விட 0.10சதவிகிதம் அதிகம் (ரூ. 20,29,352,75)<br>வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 6.73 சதவிகிதம் குறைவான தொகை ரூ 18,90,800.00 GST இல்லாமல் கொடுத்துள்ள திரு. பி. ஜோதிமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 9) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக் கப்பட்டது<br>அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br>**1)**மதிப்பீட்டை விட **6.73** சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு. பி. ஜோதிமணி ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியை ஏற்கலாம்.<br>**2)**அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்காக ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்ட வேலை உத்திரவினையும் அங்கீகரிக்கலாம்.<br>இ2/1983/2020 | |
| | **5)** இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட திரவிய ரத்தின நகர் வடக்கு பகுதி முதல் தெற்கு பகுதி வரை புதிதாக தார் சாலை அமைக்கும் பணிக்காக ரூ **20,90,000/–** மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு **14.10.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை **15.10.2020** அன்று திறக்கப்பட்டது.<br>**1)** திரு.பி. ஜோதிமணி,<br>மதிப்பீட்டைவிட **6.87** சதவிகிதம் குறைவு (ரூ. **17,08,500.00**)<br>**2)**திரு.பி. ஜெபர்சன் சாமுவேல்ராஜ்<br>மதிப்பீட்டை விட **0.11** சதவிகிதம் குறைவு (ரூ. **18,32,471.40**)<br>**3)**திரு. கே. பாலகிருஷ்ணன்<br>மதிப்பீட்டை விட **0.10** சதவிகிதம் அதிகம் (ரூ. **18,36,471.40**)<br>வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **6.87** குறைவான தொகை ரூ. **17,08,500.00** (GST இல்லாமல்) கொடுத்துள்ள திரு. பி. ஜோதிமணி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>**1)**மதிப்பீட்டை விட **6.87** சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு. பி. ஜோதிமணி ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளியை ஏற்கலாம்.<br>**2)**அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்காக ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்ட வேலை உத்திரவினையும் அங்கீகரிக்கலாம்.<br>இ2/1982/2020 | **10)** அலுவலகக் குறிப்பு **1** அனுமதிக்கப்பட்டது அலுவலகக் குறிப்பு **2** அங்கீகரிக் கப்பட்டது. |
| | **6)**தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப் பணி திடக்கழிவு மேலாண்மை கழிவுநீர் அகற்றும் பணிகளுக்காக பல்வேறு வகையாக **165** வாகனங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தினமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களின் பயன்பாடு தொடர்ச்சியாக இருப்பதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பொது சுகாதாரப் பணிகளில் தொய்வு ஏற்படும் சூழல் உருவாகிறது. இதனால் பொது சுகாதார பணிகள் இடையூறின்றி நடைபெற ஏதுவாக அவ்வப்போது ஏற்படக்கூடிய பழுதுகள் உடனடியாக சரி செய்யப்பட்டு வாகனங்கள் அந்தந்த பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. | **11)**அலுவலகக் குறிப்பு **1** அனுமதிக்கப்பட்டது அலுவலகக் குறிப்பு **2** அங்கீகரிக் கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>இப்பொருள் தொடர்பான GO Ms.No.983 (Transport IV) Dept dated 03.08.2004 அரசாணையில் அனுமதிக்கப்பட்ட தொகையினை காட்டிலும் கூடுதலாக செலவு ஏற்படுகிறது. மேற்படி செலவினமானது தவிர்க்க முடியாததாகும். எனவே இம்மாநகராட்சி பொது சுகாதார பயன்பாட்டில் உள்ள வாகனங்கள் அனைத்தும் தொய்வின்றி இயங்குவதற்கு அவ்வப்போது எதிர்பாராமல் ஏற்பட்ட அத்தியாவசிய பழுது நீக்க கூடுதல் பணிகளுக்காக 01.04.2020 முதல் 29.09.2020 வரை 10,52,644/– இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் மீதமுள்ள நடப்பாண்டு காலத்திற்கும் 01.12.2020 முதல் 31.03.2021 வரை உள்ள காலங்களுக்கும் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 33,00,000/– பொது நிதியில் இருந்து செலவு செய்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2)தற்போது வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 10,52,644/–யும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>வா.ப.எச்5/00120/2020</td><td></td></tr>
<tr><td></td><td>7)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும்– பொது நிதி திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட போல்பேட்டை மேற்கு குறிஞ்சி நகர் பகுதியில் (அன்னை இந்திரா நகர் ஜங்சன் முதல் மீளவிட்டான் மெயின் ரோடு வரை) புதிதாக தார் சாலை அமைக்கும் பணிக்காக ரூ. 22,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 14.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 15.10.2020 அன்று திறக்கப்பட்டது.<br>1)திரு. பி. ஜோதிமணி<br>மதிப்பீட்டை விட 7.09சதவகிதம் குறைவு (ரூ. 17,92,300,00)<br>2)திரு.பி. ஜெபர்சன் சாமுவேல் ராஜ்<br>மதிப்பீட்டை விட 0.11 சதவிகிதம் குறைவு (ரூ. 19,27,000.24)<br>3)திரு.கே. பாலகிருஷ்ணன்<br>மதிப்பீட்டை விட 0.10 சதவிகிதம் அதிகம் (ரூ. 19,31,032,24)<br>வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 7.09 சதவிகிதம் குறைவான தொகை ரூ 17,92,300.00 (GST இல்லாமல்) கொடுத்துள்ள திரு பி. ஜோதிமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1) மதிப்பீட்டை விட 7.09 சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு.பி. ஜோதிமணி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.</td><td>12) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2) அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்காக ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்ட வேலை உத்திரவினையும் அங்கீகரிக்கலாம். இ2/01978/2020 | |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சியில் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் பயன்பாட்டில் இருந்து வரும் தெருவிளக்குகள் அனைத்தும் LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் சேமிப்பினை கொண்டு வர ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ. 14.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு தற்போது வரை 91 சதவிகிதம் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து செய்து முடிவுறும் தருவாயில் இருந்தும் வருகிறது. இந்நிலையில் 40 வார்டுகள் கொண்ட பழைய மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே LED விளக்குகளாக மாற்றப்படாமல் மீதம் உள்ள Conventional விளக்குகளை தனியார் நிறுவனத்தாரால் தற்போது வரை இயக்கி பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இதே நேரத்தில் Added Area 20 வார்டு பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் தற்காலிக பணியாளர்களைக் கொண்டு மாநகராட்சியால் இயக்கி பராமரிக்கப்பட்டும் வரப்படுகிறது. மேலும் தற்போது 60 வார்டு பகுதிகளிலும் மாற்றம் செய்யப்படும் LED விளக்குகள் 14496 எண்ணிக்கை மற்றும் ஏற்கனவே உள்ள LED விளக்குகள் 2210 எண்ணிக்கை ஆக மொத்தம் 16706 எண்ணிக்கை தெருவிளக்குகளையும் Convention செய்யும் பணிகள் விரைவில் முடிக்கப்படும் சூழலில் அடுத்த 5 ஆண்டுகளுக்கு Convention செய்யும் நிறுவனமே LED விளக்கு பொருத்திகளில் பழுது ஏற்படும் பட்சத்தில் அவற்றை மாற்றிக்கொடுள்ள ஒப்பந்தத்தில் ஏற்கனவே உத்திரவாதம் (Warrantee) பெறப்பட்டுள்ளதால் ஒட்டுமொத்த LED விளக்குகளையும் இயக்கி பராமரிக்கும் பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 5 ஆண்டுகளுக்கு தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது.<br>ஏனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்சொன்னவாறு 60 வார்டு பகுதிகளிலும் LED Convention பணிகள் முடிக்கப்பெறும் நாள் முதல் அடுத்த 5 ஆண்டு காலம் வரை இயக்கி பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்கவும், இதற்கு முதல் ஓராண்டு உத்தரவாத காலத்தில் பராமரிக்க ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ, 50.00 லட்சமும் இரண்டாவது ஓராண்டு காலம் மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்கள் பராமரிப்பு தொகை சேர்த்து ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 75.00 (50.00 + 20.60) இலட்சத்திகும் இதன் பின்னர் மூன்றாவது ஆண்டு முதல் ஐந்தாவது அண்டு பராமரிப்பு காலம் வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் 10 சதவிகிதம் (விலைவாசி ஏற்றத்திற்கு) Escalation தொகை சேர்த்து வழங்கவும் இச்செலவினங்களை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி | 13) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>2) மேற்படிக்கு உரிய பிரேரேனைகு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை எடுக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 01.02.2021

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி